நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 348/2025

## P.W.8 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜா |
| தந்தை / கணவர் பெயர் | : | கோவிந்தன் |
| கிராமம் | : | பி.என்.பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW8** |
| வயது | : | 53 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 24–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.15 PM

1. நான் தற்போது மேட்டுர் போக்குவரத்து காவல்பிரிவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.05.2024 ம் தேதி கொளத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சாந்தா க.பெ.சின்னராஜ் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று

கொளத்தூர் காவல் நிலைய குற்ற எண்.160/2024 ச.பி. 294(பி), 506(i) இ.த.ச வாக வழக்கு பதிவுசெய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகாருடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டுர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.05.2024 ம் தேதி 18.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராதாமணி, கோபால் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்பு சம்பவயிட சாட்சிகள் சாந்தா, சின்ராஜ், குமார், மணிமேகலை, அருக்காணி, ராதாமணி, கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். என்னுடைய விசாரணையில்இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் வாதியை தவிர மற்ற சாட்சிகள் யாரும் எதிரி குஞ்சப்பன் என்பவர் வாதிக்கும் அவரது கணவருக்கும் கொலைமிரட்டல் எதுவும் விடுக்கவில்லை என தெரியவந்ததால் இந்த வழக்கின் ச.பி. 294(பி), 506(i) இ.த.ச விலிருந்து ச.பி. 294(பி) இ.த.ச வாக சட்டபிரிவு மாறுதல் 18.05.2024 ம் தேதி செய்தேன். **( சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரியை கைதுசெய்ய தேடிய நிலையில் எதிரி தலைமறைவாக இருந்தார்.

4. வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 11.06.2024 ம் தேதி தலைமறைவு எதிரியாக குறிப்பிட்டு இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.2 சின்ராஜ் என்பவர் எதிரி மீது O.S. 110/2020 என்ற எண்ணில் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் சரிதான். அதேபோல் எதிரி குஞ்சப்பனும் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து வழக்கு

நடந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்குகளில் நீதிமன்ற உத்தரவின்படி நீதிமன்ற ஆணையர் பிரச்சனைக்குரிய இடத்திற்கு வந்து பார்வையிட்டு சென்றார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

2. மேலும் இதேபோன்ற பிரச்சனை சம்மந்தமாக எதிரி குஞ்சப்பன் கடந்த 18.02.2024 ம் தேதி அ.சா.2 சின்ராஜ் மீது புகார் கொடுத்து CSR.44/2024 எண் கொடுக்கப்பட்டு நான்தான் விசாரணை செய்தேன். இருத்தரப்பினரும் வருங்காலத்தில் பிரச்சனை எதுவும் செய்யமாட்டோம் என்று எழுதிக்கொடுத்ததன் அடிப்படையில் விசாரணை முடிக்கப்பட்டது.

3. புகார் 6 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கான காரணம் நான் பதிவுசெய்த முதல் தகவல் அறிக்கையில் வாதியால் தாமதம் என்று குறிப்பிட்டுள்ளேன். குறிப்பிட்ட காரணம் எதுவும் நான் சொல்லவில்லை.

4. சம்பவம் உண்மையாக இருந்திருந்தால் உடனடியாக புகார் கொடுத்திருப்பார்கள் என்றாலும் காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும் அதற்கான சரியான காரணத்தை நான் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் மேற்படி காலதாமதத்தை வழக்கிற்கு ஏற்ப முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரை தயார் செய்ய பயன்படுத்திக்கொண்டேன் என்றாலும் சரியல்ல.

5. நான் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் 2 வீடுகளை தவிர மற்ற நபர்கள் யாரும் இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபரும் சம்பவயிடத்தில் இருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தள்ளித்தான் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

6. நான் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சர்வே எண். 164/2A சம்மந்தப்பட்ட நிலம் எதிரி குஞ்சப்பனுக்கு சொந்தமானது என்றால் இந்த சர்வே எண் இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டது அல்ல. அது யாருடையது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட சர்வே எண். 164/23 ஆகும். மேற்படி 164/23 நிலம் அ.சா.2 சின்ராஜ்க்கு சொந்தமானது என்பது குறித்து புகாரை தவிர

வேறு எந்த ஆவணங்களையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

7. நான் சொல்வதுபோல் 164/23 என்ற சர்வே எண் கொண்ட நிலம் இல்லை என்றாலும் உண்மையில் 164/2B சர்வே எண் நிலம்தான் அ.சா.2 சின்ராஜ்க்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி 164/2B நிலம் சம்பவயிடத்தில் இல்லையென்றாலும் அது வேறு இடத்தில் உள்ளதென்றாலும் சம்பவம் நடந்த இடம் எதிரிக்கு பாத்தியப்பட்ட 164/2A நிலம் என்றாலும் சரியல்ல.

8. மேற்படி நிலம் எந்த சர்வே எண்ணுக்கு உட்பட்டது என்று நான் குறிப்பாக விசாரணை செய்யவில்லை. யாரையும் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.35 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**